# பிறந்தநாள் வாழ்த்து! 11-02-2021



அமிழ்தினும் இனியதாம் மழலை!
ஆன்றதோர் அறிவின் தேடலாம் விடலை!
இருப்பதும் இருந்ததும் ஏன் என்கும்!
ஈன்றவன் தன்னை துளைத் தெடுக்கும்!
உறவின் வழிமுறை அறிந்து கொள்ள,
ஊரின் பெயரொடு அறிவில் தேக்கும்!
எல்லாம் அளந்திடும் ஆவல் கொள்ளும்!
ஏன்தான் இவையென்ற கேள்வி தரும்!
ஐயங்கள் அகன்றபின் ஆசை எழும்!
ஒவ்வொன்றாய் அறிந்திடும் இளமையிலே,
ஓங்கிடும் வாழ்வின் நிலை தெரியும்!
ஔவைச் சொல்லியப் பொருளறிக!
அஃதே வாழ்வின் நிலைக்கலனாம்!

**செல்வன் தருண் கிருஷ்ணா வுக்கு,**
**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!**

